**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.181/2022 | அரசுத்தரப்பு | P.W.2 |
| பெயர் | மலர்கொடி | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | கார்த்திக் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.06.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோகர்ணம் கம்மாளர் தெருவில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 முத்துக்குமார் எனது கணவரின் சகோதரர். கடந்த 15.08.2021 தேதியில் நடுஇரவு சுமார் 2.45 மணியளவில் நான் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தேன். என்னுடன் எனது மாமியார் ஆயிபொண்ணு, எனது கணவரின் பெரிய அண்ணன் வீரமுத்து, எனது கணவர் கார்த்தி ஆகியோர் தூங்கிக் கொண்டிருந்தோம். எங்கள் வீட்டிற்கு வெளியே வெடி வெடித்ததுபோல் சத்தம்கேட்டது. நாங்கள் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தோம். வீட்டின் முகப்பு கதவில் போட்டிருந்த ஸ்கிரின் துணி எரிந்த கொண்டிருந்தது. ஆட்டுக்குட்டி ஒன்று தீயில் கருகிவிட்டது. பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி அதை பற்ற வைத்து பெட்ரோல் குண்டை எரிந்துள்ளார்கள். அது கதவில் பட்டு ஸ்கிரின் துணி மற்றும் ஆடு எரிந்தது. நாங்கள் வெளியில் வந்து பார்த்தபோது வேறு நபர்கள் யாரும்அங்கு இல்லை. பாட்டில் துகள்கள் எங்கள் வீட்டு வாசலில் கிடந்தது. போலிசில் எனது கணவரின் சகோதரர் முத்துக்குமார் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரிக்கும்போது நாங்கள் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தபோது எங்கள் வீட்டிலிருந்து ஒரு இரு சக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் சென்றதை பார்த்ததாக நான் கூறினேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் வழக்கு சம்பவம் சம்மந்தமாக எங்கள் வீட்டிற்கு வந்து இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததற்காக நானும், சுகன்யா என்பவரும் அதில் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கையெழுத்து அ.சா.ஆ.2. சம்பவ இடத்தில் உடைந்த பாட்டில் துகள்கள், எரிந்தநிலையில் உள்ள ஸ்கிரின் துணி, திரி ஆகியவைகளை கைப்பற்றியதற்காக போலிசார் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரிலும் நானும் சுகன்யாவும் கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகரில் உள்ள என்னுடைய கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை

விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஸ்கிரின் எங்கள் வீட்டில் போட்டிருந்த ஸ்கிரின் தான். என்னிடம் காட்டப்படும் உடைந்த பாட்டில் மற்றும் திரியை தான் போலிசார் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள்.

**<u>1வது எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் என்னிடம் கூறியதன்பேரில் தான் மூன்று நபர்கள் இரு சக்கர வாகனத்தில் சென்றது எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் எங்களுடைய வீட்டில் வைத்து தான் போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அந்த ஆவணங்கள் எங்கு வைத்து தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் கையோடு கொண்டு வந்திருந்த மேற்படி ஆவணங்களில்தான் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் திரி தீயில் எரிந்த திரியாக இல்லை. போலிசார் கைப்பற்றும்போது எரிந்த நிலையில் இருந்த திரியை தான் கைப்பற்றினார்கள்.

1வது எதிரிதரப்பின் குறுக்குவிசாரணையை 2,3 எதிரிகள் தரப்பில் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/– மலர்கொடி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.